**அயகம பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அயகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் அயகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிக்குரிய மூலதன வருமானம் ரூபா 18,613,759 ஆன போதும், அது ரூபா 34,201,746 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதாக. | ஆண்டிக்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு முத்திரை கட்டண குறை ஒதுக்கீட்டை சரியாக இனங்காணாது செம்மையாக்கல் மேற்கொண்டதில் நிலுவை முத்திரை கட்டண கணக்கின் மீதி ரூபா 2,049,912 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2022 கணக்கு வைக்கும் போது அட்டுறு அடிப்படையில் மீது வருடாந்த மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு சரியான அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | 2020 ஆண்டிற்கான நிலுவை வாடகை வருமானம் ரூபா 637,757 மீளாய்வாண்டினுள் உதவிப் பணம் பங்களிப்பு பணம் நிவாரண கணக்கு ஊடாக பதிவழித்ததால் ஆண்டிற்கான மீண்டெழும் செலவினம் அதற்கு சமமான பெறுமதியால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2022 இறுதி கணக்கை தயாரிக்கும் போது ரூபா 637,757 ஆன தொகையை திரண்ட நிதியத்தினூடாக செம்மையாக்குவதாக. | சரியான கணக்குகள் மூலம் கணக்கிடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் கிரயம் ரூபா 540,000 ஆன பாதை தளர்த்தியை பராதீனம் செய்திருந்த போதும், அவற்றின் கிரயமாக | குறைத்து கணக்கீடு செய்த ரூபா 280,000 ஆன தொகைக்காக | சரியான பெறுமதியை இனங்கண்டு |

| | | |
|---|---|---|
| ரூபா 260,000 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 இறுதி கணக்கு தயாரிக்கும் போது செம்மையாக்கம் செய்வதாக. | கணக்கீடு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 1,627,450 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 1,466,943 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஏக்கர் வரி | | |
| 2022 ஆகஸ்ட் 17 திகதியன்றும் 277 அலகுகளிலிருந்து ஏக்கர் வரி ரூபா 164,542 அறவிட வேண்டியதாக நிலவியது. | சபையின் கள அலுவலர்கள் மூலம் ஏக்கர் வரி ஒப்பாய்வு செய்யப்படுவது என மற்றும் 2022 அண்டினுள் கே படிவம் ஊடாக காணி உரிமையாளர்களை அறிவூட்டி மீதியை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | அறவிட வேண்டிய வருமானத்தை இனங்கண்டு காலரீதியாக அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஜூலை 30 ஆம் திகதிய உடன்படிக்கை பத்திரம் பிரகாரம் விவசாய பயிர் விற்பனை மத்திய நிலையத்தில் கடையறைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் திகதிக்கு மொத்த முற்செலுத்தற் தொகையாக (Key Money) தவணை தொகையின் அரைவாசி செலுத்த வேண்டுமெனவும், எஞ்சிய தொகையை 06 மாதத்தினுள் செலுத்தி முடிக்க வேண்டுமெனவும் அறிவித்திருந்த போதும், கணக்காய்வு திகதியன்றும் 03 கடையறைகளுக்கான ரூபா 470,000 அன முற்செலுத்தற் தொகையை (Key Money) அறவிடுவதற்கு சபைக்கு இயலாதிருந்தது. | முற்செலுத்தற் தொகை மற்றும் தவணை தொகை செலுத்துவதை புறக்கணிக்கும் குத்தகைகாரர்கள் தொடர்பாக பொது சபையை அறிவூட்டி அது தொடர்பாக எடுக்க முடியுமான நடவடிக்கை பற்றி தீர்மானமொன்றை எடுக்க நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உள்ளூராட்ச்சி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆம் திகதிய 03/2020 சுற்றறிக்கையின் 06(iv) ஆம் பிரிவின் பிரகாரம் மாதாந்த வாடகையை தொடர்ந்து 03 மாதங்களிற்கு செலுத்தாதுள்ள போது குறித்த கடையறையின் உடமையை உள்ளூராட்ச்சி நிறுவனத்திற்கு சுவீகரித்துக் கொண்டு மீள் டெண்டர் செய்ய முடியுமானவாறு நிபந்தனைகளை உடன்படிக்கைக்கு உள்ளடக்க வேண்டிய போதும், அவ்வாறான நிபந்தனையொன்றை உடன்படிக்கைக்கு உள்ளடக்காது சபைக்கு சொந்தமான 15 கடையறைகளிலிருந்து 02 மாதங்கள் முதல் 22 மாதங்கள் வரை நிலுவையான அறவிட வேண்டிய கடையறை வாடகை ரூபா 938,226 தொகையை கணக்காய்வு திகதி வரையும் அறவிட சபைக்க இயலாதிருந்தது. | சுற்றிக்கை பிரகாரமான நிபன்தனைகளை உரிய உடன்படிக்கைக்கு உள்ளடக்குவதாகவும், நிலுவை தொகையை பகுதிகளாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை காலரீதியாக அறவிட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிருவகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெற்ற ரூபா 17,748,000 கடன் தொகையொன்றை ஈடுபடுத்தி இரட்டைமாடி வியாபார கட்டிட தொகதியொன்றை நிர்மாணிப்பதற்காக 2021 ஜுலை 29 அம் திகதி ரூபா 19,787,100 ஆன வேலை பெறுமதியொன்றின் கீழ் உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின் 2021 ஆகஸ்ட் 10 திகதிய சபை தீர்மானம் பிரகாரம் செயற்படுத்த உத்தேச காணிக்கு பதிலாக அதற்கு அருகில் உள்ள காணி பொருத்தமென பிரதேச சபை தீர்மானித்ததன் காரணமாக மதிப்பிடப்பட்ட செலவினத்தை விட அதிக தொகையொன்று கருத்திட்டத்திற்கு செலவிட நேரிடுவதாகவும், வேலை பூர்த்தி செய்யப்படவுள்ள 2022 ஜுலை 31 திகதியன்று உரிய வேலையை பூர்த்தி செய்ய முடியாதெனவும், புதிய செலவின மதிப்பீடொன்று மற்றும் கால நீடிப்பதொன்றை பெற்றுத் தருமாறு ஒப்பந்ததாரர் கோரியிருந்தார். அதன் பிரகாரம் நிர்மாண இடத்தை தீர்மானிக்காது கருத்திட்டத்தை திட்டமிடுவதுனூடாக கடன் தொகை பெற்றுக் கொள்வதன் நோக்கங்களை மற்றும் கருத்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள இயலாதிருந்தது. | நிர்மாண இடத்தை மாற்றியதன் மீது சபைக்கு நட்டமொன்று ஏற்பட்டதாக குறிப்பிட்ட போதும், தேசிய கொள்கையில் இடம்பெறும் அயகம சிறிய நகரமொன்றாக மொத்த உப பிரிவுகளையும் சரியான முறைப்படி ஆக்கபூர்வமாக இடவமைப்பின் போது பங்கமொன்று ஏற்படவில்லை எனவும், பணவீக்க நிலையின் மீது புதிய மதிப்பீடொன்றை தயாரிக்க வேண்டியுள்ளதாகவும், தற்போது நிர்மாணத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக. | பெற்றுக் கொள்ளும் கடனை ஒழுங்காக மற்றும் வினைத்திறனாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். |